# முயல் வளர்ப்பு

முயல் வளர்ப்பு குறைந்த செலவில், குறுகிய காலத்தில் வருமானம் பெருக்க சிறந்த தொழிலாகும். முயல்கள் நன்கு பராமரித்து வளர்ப்பதன் மூலம் ஒரு இலாபகரமான சுயதொழிலை உருவாக்க முடியும். முயலை இறைச்சிக்காகவும், தோலுக்காகவும், உரோமத்திற்காகவும் வளர்க்கலாம். தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களில் முயல் வளர்ப்பு பொதுவாக இறைச்சி உற்பத்திற்காக மட்டுமே பயன்படுகிறது. முயல் இனங்களை இறைச்சி வகை எனவும், உரோம வகை எனவும் பிரிக்கலாம். வெப்பமான பகுதிகளில் இறைச்சி வகை இனங்களை வளர்க்கலாம். குளிர் பிரதேசங்களில் உரோம வகை இனங்கள் நன்றாக வளரும்.

**இறைச்சி வகை இனங்கள் ($35^0$-$40^0$ செல்சியஸில் நன்கு வளரக் கூடியது)**

இறைச்சி வகை இனங்கள் உடல் எடையை அடிப்படையாகக் கொண்டு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

| அதிக எடை (4-6 கிலோ) | நடுத்தர எடை (3-4 கிலோ) | குறைந்த எடை (2-3 கிலோ) |
|---|---|---|
| அ. வெள்ளை ஜெயண்ட்<br>ஆ. சாம்பல் ஜெயண்ட்<br>இ. பிளமிஷ் ஜெயண்ட் | அ. நியூசிலாந்து வெள்ளை<br>ஆ. நியூசிலாந்து சிவப்பு<br>இ. கலிபோர்னியா வகை | அ. இமாலயன் வகை<br>ஆ. சோவியத் சின்சில்லா<br>இ. ஆல்பினோ வகை |

**உரோம வகை இனங்கள் ($15^0$-$20^0$ செல்சியஸில் நன்கு வளரக் கூடியது)**

- பிரிட்டிஷ் அங்கோரா
- ரஷ்யன் அங்கோரா
- ஜெர்மன் அங்கோரா

**முயல்களை தேர்ந்தெடுத்தல்**

- முயல்களை 2 கிலோ உடல் எடை உள்ளபோது வாங்க வேண்டும்.
- பெண் முயலுக்கு குறைந்த பட்சம் 8 பால் காம்புகள் இருக்க வேண்டும்.
- ஆண், பெண் முயல்களையும் தனித்தனியே வெவ்வேறு பண்ணைகளில் இருந்து வளர்க்க வேண்டும்.

**பராமரிப்பு முறைகள்**

முயல்களை ஆழ்கூள முறை அல்லது கூண்டு முறையில் வளர்க்கலாம்.

## 1. ஆழ்கூள முறை

பண்ணையை நல்ல காற்றோட்ட வசதியுடைய மேட்டுப்பாங்கான இடத்தில் அமைக்க வேண்டும். கான்கிரீட் தரையின் மேல் நெல் உமி, கடலைத்தோல், நறுக்கிய வைக்கோல், மரத்தூள் போன்றவற்றில் ஏதேனும் ஒன்றினை ஆழ்கூளமாக 6-9 செ.மீ. உயரம் வரை போட வேண்டும். பின்வருமாறு, வயது, உடல் வளர்ச்சிக்கு ஏற்றவாறு தீவனம் மற்றும் தண்ணீர் தொட்டிகளை அமைத்தல் வேண்டும்.

| உடல் வளர்ச்சி | தேவைப்படும் இடமளவு |
|---|---|
| வளர்ந்த ஆண் முயல் (6 மாதத்திற்கு மேல்) | 5 ச.அடி |
| தாய் முயல் (6 மாதத்திற்கு மேல்) | 6 ச.அடி |
| இளம் முயல் | 2.5 ச.அடி |
| குட்டிகளுடன் தாய் முயல் | 8 ச.அடி |

## 2. கூண்டு முறை

கூண்டின் உயரம் 50 செ.மீ. ஆகவும், அகலம் 60 செ.மீ. ஆகவும் இருத்தல் வேண்டும். கூண்டின் நீளம் தேவைக்கேற்ப அமைத்துக் கொள்ளலாம். இரும்புக் கம்பிகளைக் கொண்டு கூண்டின் அடிப்பாகம் 1.8 செ.மீ. x 1.8 செ.மீ. என்ற அளவிலும், பக்கங்களில் 2.5 செ.மீ. x 2.5 செ.மீ. என்ற அளவிலும் கூண்டினை அமைத்தல் வேண்டும். கூண்டின் அடிப்பாகம் தரை மட்டத்தில் இருந்து 75-90 செ.மீ. உயரத்தில் இருக்குமாறும் எலி, பாம்பு தொல்லைகள் இல்லாதவாறும் கூண்டுகளை வைக்க வேண்டும். தீவனம், தண்ணீர் வைப்பதற்கு கூண்டின் முன்பக்கத்தில் வெயளியிலிருந்து தீவனம் வைக்கும் வண்ணம் அமைக்க வேண்டும்.

| வ.எண் | வகை | நீளம் (செ.மீ.) | அகலம் (செ.மீ.) | உயரம் (செ.மீ.) |
|---|---|---|---|---|
| 1 | பெண் முயல் கூண்டு (குட்டி ஈனும் பெட்டி உள்ளடங்கியது) | 90 | 75 | 75 |
| 2 | ஆண் முயல் கூண்டு | 75 | 45 | 45 |

இரண்டு வகையான பராமரிப்பிலும் அதிக இலாபம் பெற முயல்களை சிறப்பான முறையில் பிரித்து வளர்த்தல் வேண்டும்.

- பிறந்த குட்டிகள் முதல் 10 நாட்களுக்கு கண் திறக்கமால் தாய் முயலுடன் சேர்ந்து இருந்து பால் குடித்து வளரும். மேலும் 4-10 நாட்களுக்கு (மூன்றாவது வார வயது முடியும் வரை) தாயுடன் விட்டுவிட்டு பின்னர் பிரிக்கவும்.

- மூன்றாவது வாரத்திற்குப் பின் ஆண், பெண் பிரிக்கப்பட்டு வெவ்வேறு குழுக்களாக வளர்க்க வேண்டும்.
- ஐந்து முதல் ஆறு மாதத்தில் பருவ வயதினை அடையும் முன்பு ஆண் முயல்களைப் பிரித்து, ஒவ்வொரு ஆண் முயலையும் தனி அறையிலோ, தனிக் கூண்டிலோ வைத்து வளர்க்க வேண்டும். குழுவாக ஆண் முயல்களை வளர்ப்பதனால் சண்டையிடுவதன் மூலமாக இறப்பு எண்ணிக்கை அதிகமாக வாய்ப்புண்டு
- கருவுற்ற பெண் முயல்களையம் தனித்தனியே குட்டிகளைப் பிரிக்கும் வரை வளர்த்தல் வேண்டும்.

**தீவன முறைகள்**

முயலுக்கு அடர்தீவனம், பசுந்தீவனம் என்று இருவகையான தீவனம் தருதல் அவசியம். அடர்தீவனம் (அ) கலப்பு தீவனத்தை கீழ்கண்ட சதவீதத்தில் நாமே தயார் செய்யலாம்.

**மாதிரி கலப்புத் தீவனம்**

| | | |
|---|---|---|
| கோதுமை தவிடு | - | 33% |
| மக்கா சோளம் | - | 30% |
| கடலைப்பொட்டு | - | 25% |
| கடலைப் பிண்ணாக்கு | - | 10% |
| தாது உப்பு | - | 1.5% |
| உப்பு | - | 0.5% |
| மொத்தம் | - | 100% |

பசுந்தீவனமாக புல், கீரை வகைகள், முள்ளங்கி, அகத்தி, கல்யான முருங்கை, வீட்டில் வீணாகும் காய்கறிகள், சூபாபுல், வேலிமசால், ஸ்டைலோபுல் போன்றவற்றை கொடுக்கலாம். பெரும்பாலும் முயல்கள் சுத்தமான பசுந்தீவனத்தையே விரும்பிச் சாப்பிடும். சுத்தமான குடிநீர் தேவையான அளவு கொடுக்க வேண்டும். முயலுக்கான தீவத் தேவை பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | தீவனத்தேவை | அடர்தீவனம் | பசுந்த தீவனம் |
|---|---|---|---|
| 1 | வளரும் குட்டிகளுக்கு | 40 கிராம் | 150 கிராம் |
| 2 | வளர்ந்த முயல்களுக்கு (2-3 கிலோ) | 60 கிராம் | 150 கிராம் |
| 3 | கருத்தரித்த முயல்களுக்கு (2.5-3.5 கிலோ) | 75 கிராம் | 300 கிராம் |
| 4 | பாலூட்டும் முயல்களுக்கு (2-3 கிலோ) | 150 கிராம் | 350 கிராம் |

**தீவன பராமரிப்பில் கவனிக்க வேண்டிய முக்கிய குறிப்புகள்**

- கலப்புத் தீவனம் தயாரிக்க அந்தந்த இடங்களில் விலைகுறைவாக கிடைக்கக்கூடிய தானிய வகைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
- பசுந்தீவனத்தில் எளிதாக கிடைக்கக்கூடிய அகத்தி இலை, அருகம்புல், வீட்டில் கிடைக்கக்கூடிய எஞ்சிய உபயோகிக்க முடியாத காய்கறிகள், காய்கறி கடைகளிலிருந்து கிடைக்கும் விலை குறைவான எஞ்சிய காய்கனிகள் ஆகியவற்றை உபயோகிக்க வேண்டும்.

**இனப்பெருக்கம்**

**1. இனப்பெருக்க வயது**

பெண் முயல் : 5-6 மாதங்கள், ஆண் முயல் : 1 வருடம் ஆன முயல்கள் 5-6 மாதங்களில் பருவத்தினை அடைந்தாலும், ஒரு ஆண்டிற்குப் பிறகு இனவிருத்திக்குப் பயன்படுத்தினால் அதிகப்படியான தரமான குட்டிகள் கிடைக்கும்.

**2. சினைப்பருவ அறிகுறிகள்**

- அமைதியின்மை
- வாயை தரையில் அல்லது கூண்டில் அடிக்கடி தேய்த்தல்
- ஒரு புறமாக சாய்ந்து படுத்தல
- வாலை தூக்குதல்
- தடித்த, கருஞ்சிவப்பான, ஈரமான பெண் உறுப்பு

**3. இனச்சேர்க்கை**

மேலே குறிப்பிட்ட சினைப் பருவ அறிகுறிகள் காணப்பட்டவுடன் பெண் முயலினை ஆண் முயல் இருக்கும் இடத்திற்கு எடுத்துச் சென்று இனச்சேர்க்கைக்கு விட்டுவிட வேண்டும். சரியான பருவத்தில் உள்ள பெண் முயல் வாலைத் தூக்கி ஆண் முயலின் இனச்சேர்கையை ஏற்றுக் கொள்ளும். ஓரிரு நிமிடத்தில் இந்நிகழ்ச்சி நடந்தவுடன், ஆண் முயல் “கிரீச்” என்ற சப்தத்துடன் ஒரு புறமாகவோ அல்லது பின்புறமாகவோ விழும். இதுவே சரியாக இனச்சேர்க்கை நடந்ததிற்கான அறிகுறியாகும்.

**4. சினைக்காலம்**

- சினைக்காலம் 28-34 நாட்கள்
- சினைக்கால இடைவெளி இரண்டு மாதங்கள் ஆகும்.
- குட்டி ஈன்ற ஓரிரு வாரங்களிலேயே சினை அறிகுறிகள் தென்பட்டால் மீண்டும் இணை சேர்க்கலாம்.

- பெண் முயலுக்கு சினைப்பருவத்திற்கு வருவதற்கான குறிப்பிட்ட மாதங்கள் இல்லாமல், எல்லா மாதங்களிலும் சினை ஏற்கும் தன்மை உண்டு.

## 5. ஆண், பெண் முயல் குட்டிகளை அடையாளம் காணுதல்

மூன்றாவது வார இறுதியில் ஆண், பெண் முயல்கள் அடையாளம் காணப்பட்டு பிரித்துவிடலாம். குதவாயை விரல்களால் மெதுவாக அழுத்தினால், சிறிய பிளவு போன்ற அமைப்பு பெண் முயலிலும், சிறு உருளை வடிவான நீட்டு போன்ற அமைப்பு ஆண் முயலிலும் காணலாம்.

## தன் மலத்தை தானே உண்ணுதல்

முயல்கள் அதிகாலையில் பச்சை நிறமான சற்று மிருதுவான மலத்தினை கழிக்கும். இக்கழிச்சலை ஆவன வாயிலிருந்து நக்கி உட்கொள்ளும் பழக்கம் காணலாம். இதே மலம் உயிர்ச்சத்து, புரதச்சத்து நிறைந்துள்ளது. எனவே இது ஒரு தவறான செயலாகக் கருத வேண்டாம்.

## நோய் பாதுகாப்பு

முயல்கள் பலவிதமான நோய்களால் பாதிக்கப்படுகின்றன. அவையாவன

1. தோல் சிரங்கு
2. காக்சிடியோசிஸ்
3. பாஸ்புரெல்லோசிஸ்
4. கண் சுழற்சி, காதில் சீழ்
5. சுவாச நோய்
6. குடல் சுழர்ச்சி
7. காது பேன்கள்
8. பின் கால் பக்கவாதம் மற்றும் வெப்பதாக்கு

அதிக இலாபம் ஈட்ட இது போன்ற நோய்களை வரவிடாமல் தடுப்பதும், நோய் வந்துவிட்டால் தகுந்த சிகிச்சை முறைகளை கால்நடை மருத்துவர்கள் மூலம் பெறுவதும் மிகவும் அவசியமாகும். நல்ல காற்றோட்டமான, ஈரமில்லாத சூழ்நிலையில் சுகாதாரமான முறையில் தக்க இடவசதி அளித்து முயல்களை வளர்த்தல் வேண்டும்.

## உரோமத்திற்காக முயல் வளர்த்தல்

உரோமத்திற்காக வளர்க்கப்படும் அங்கோரா இனங்களை தனித்தனியாகக் கூண்டிலிட்டு வளர்த்தல் வேண்டும். வைக்கோல் படுக்கை இட்டு வளர்ப்பதால் முயல்களுக்கு புண்கள் ஏற்படுவதை தடுப்பது மட்டுமல்லாமல் 25% அதிக உரோமமும் கிடைக்கிறது. மூன்று மாதங்களுக்கு ஒருமுறை முடியை வெட்டி

எடுக்கலாம். சிறந்த இரக முடி 9 மாத வயதிலிருந்து கிடைக்கும். ஆண்டொன்றிற்கு பெட்டை முயல் 1 கிலோ முடியும், ஆண் முயல் 750 கிராம் முடியும் கொடுக்கும். மூன்று மாதங்களுக்கு மேல் வெட்டாமல் விடக்கூடிய முடிகள் சடைப்பிடித்து விடும்.